## DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF THE CHIEF JUDICIAL MAGISTRATE,VIRUDHUNAGAR DISTRICT AT SRIVILLIPUTTUR.

Calendar )
Preliminary Register) CC.197/2024
Sessions)

( Prosecution P.W.2
Deposition of witness for (Defence
(Court

| Name | பாலமுருகன் | -- | |
|---|---|---|---|
| Father's Name | கருப்பையா | Calling | கூலி |
| Village | மேலகோபாலபுரம் | Religion | |
| Taluk | வத்திராயிருப்பு | Age | 42 |

Solemnly affirmed in accordance with the provisions of the Oath Act, 1969 (Central Act 44 of 1969 on the 24th day of November 2025.

**Accused absent. Petition filed.**

**முதல் விசாரணை**

நான் வத்திராயிருப்பு தாலுகா, மேலகோபாலபுரத்தில் குடியிருந்து வருகிறேன். நான் கூலி வேலை செய்து வருகிறேன். அ.சா.1 உறவு முறையில் எனக்கு பெரியப்பா ஆவார். இவ்வழக்கில் இறந்துபோன முருகேசன் அ.சா.1 ன் மகன் ஆவார். முருகேசன் கூலி வேலை செய்து வந்தார். 22.05.2023 அன்று நான் திருவில்லிபுத்தூரிலிருந்து இருசக்கர வாகனத்தில் கோபாலபுரம் சென்று கொண்டிருந்தேன். அப்போது இரவு 08.30 மணி அளவில் கலசலிங்கம் கல்லூரி அருகில் உள்ள வர்ஷினி ஹோட்டல் அருகே முருகேசன் ரோட்டின் மேற்கு திசையில் நடந்து கொண்டிருந்தபோது ராஜபாண்டியன் என்பவர் TN84M9441 என்ற பதிவெண் உள்ள இருசக்கர வாகனத்தை அவர் ஓட்டி வந்தும், அவருக்குப்பின்னார் அவர் மனைவி அமர்ந்து கொண்டும் சென்று கொண்டிருந்போது நடந்து சென்று கொண்டிருந்த முருகேசன் மீது மோதிவிட்டார். அதனால் இருசக்கர வாகனத்தில் சென்ற இராஜபாண்டியும், அவர் மனைவியும் கீழே விழுந்துவிட்டார்கள். முருகேசனும் தலையின் பின்பக்கப்பகுதியில் அடிபட்டு கீழே விழுந்துவிட்டார். இராஜபாண்டி உடனடியாக எழுந்துவிட்டார். ஆனால் அவர் மனைவிக்கு சில சிறு காயங்கள் ஏற்பட்டது. உடனடியாக நான் 108 ஆம்புலன்சிற்கு போன் செய்து ஆம்புலன்ஸ் வந்ததும் அங்கு இருந்த கூமாபட்டியைச் சேர்ந்த பால்ச்சாமி மற்றும் சிலரும் சேர்ந்து ஆம்புலன்சில் காயம் பட்ட முருகேசனை ஏற்றிக்கொண்டு திருவில்லிபுத்தூர் அரசு மருத்துவமனைக்கு கொண்டு சென்றார்கள். நான் ஆம்புலன்சில் செல்லவில்லை. உடனடியாக நான் முருகேசனின் அப்பாவான அ.சா.1 அமிர்தத்திடம் போன் மூலமாக தகவல் தெரிவித்தேன். அதன்பின்னர் 2,3 நாட்கள் கழித்து மதுரையில் வைத்து முருகேசன் சிகிச்சை பலனின்றி இறந்துபோய் விட்டதாக என்னிடம் தெரிவித்தார்கள்.

போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

அ.சா.1 அமிர்தம் எனக்கு பெரியப்பா முறை. அன்றைய தினம் சிறுமலையில் திருவிழா நடந்தது. ஆனால் சம்பவ சமயத்தில் நிறைய ஆட்கள் இல்லை. சிறுமலை திருவிழா இரண்டு நாட்கள் நடைபெறும். அந்த திருவிழா நடக்கும் நாட்களில் ஆட்கள் வந்தும், போய்க்கொண்டும் இருப்பார்கள். முருகேசன் வடக்கிலிருந்து, தெற்கு வந்து மேற்கு நோக்கி போகும்போது விபத்து நடைபெற்றது. நான் சொன்னது போல இருசக்கர வாகனத்தில் எந்த பெண்ணும் அமர்ந்து வரவில்லை என்றும், அவருக்கு எந்த காயமும் ஏற்படவில்லை என்றும் சொன்னால் சரியல்ல. டமார் என்று சத்தம் கேட்டு பார்த்தபோது விபத்து நடந்திருந்தது. சம்பவ இடத்திலிருந்து 100 மீ தூரத்தில் கலசலிங்கம் மருத்துவக்கல்லூரி மருத்துவமனை உள்ளது. காயம்பட்ட முருகேசனை அங்குள்ளவர்கள் முதலில் கலசலிங்கம் மருத்துவமனையில் தான் சேர்த்தார்கள் என்று சொன்னால் அது பற்றி எனக்குத் தெரியாது. நான் சம்பவ இடத்தில் இருந்திருந்தால் நானும், ஆம்புலன்சில் ஏறிச் சென்றிருப்பேன் என்று சொன்னால் சரியல்ல. நான் சொன்னது போல சொன்ன விதத்தில் சம்பவம் நடக்கவில்லை என்றும், இறந்துபோனவர் எனக்கு சகோதரர் உறவு முறை என்பதால் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

**மறு விசாரணை** இல்லை.

சாட்சியின் கையொப்பம்

**Name of the Interpreter : Not necessary**

Solemnly affirmed in accordance with the provisions of the Oath Act, 1969 (Central Act 44 of 1969 on the 24th day of November 2025.

Taken down by me open court read over to the witness in the presence of accused and admitted by the witness to be correct.

**Chief Judicial Magistrate,**
**Virudhunagar District at**
**Srivilliputtur.**